**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE, KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 173-2024 (160/2020) |
| Deposition of witness for | Prosecution : LW 4 - PW 3 |
| | Defence : |
| | Court : |
| Name : சுகந்தி | Father's Name: ஆறுமுகம் |
| | Husband Name: |
| Village : காட்டுமலையனூர் | Taluk : |
| | Calling : |
| | Age : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2026

**2** முதல் **4** எதிரிகள் ஆஜர்**. 1**ம் எதிரி ஆஜர் இல்லை**.** கு**.**வி**.**மு**.**ச**.**பிரிவு **317** ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபடுகிறது**.**

சாட்சியின் அடையாளம் வேட்டவலம் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. ரத்தினவேல் அவர்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u> **:**

**நான் தற்போது காட்டுமலையனூர் கிராமத்தில் வசித்துவருகிறேன். அ.சா.1 சிலம்பரசன் எனது அக்கா மகன் ஆவார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். தேதி, வருடம், மாதம் ஞாபகம் இல்லை. நாகப்பன், சுப்பிரமணி, சந்துரு, காமாட்சி ஆகியோர் அனைவரும் சிலம்பரசனை அடித்தார்கள். சந்துரு கத்தியால் குத்தவந்தார். நாகப்பன் கோலால் அடித்தார். காமாட்சி துடைப்பத்தால் சிலம்பரசனை அடித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>குறுக்குவிசாரணை</u>**

குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 173-2024 (160/2020) |
| Deposition of witness for | Prosecution : LW 3 - PW 2 |
| | Defence : |
| | Court : |
| Name : சாந்தி | Father's Name: |
| | Husband Name: சேகர் |
| Village : காட்டுமலையனூர் | Taluk : |
| | Calling : |
| | Age : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2026
**2** முதல் **4** எதிரிகள் ஆஜர். **1**ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு **317** ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபடுகிறது.
சாட்சியின் அடையாளம் வேட்டவலம் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. ரத்தினவேல் அவர்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u> **:**

நான் தற்போது காட்டுமலையனூர் கிராமத்தில் வசித்துவருகிறேன். அ.சா.1 சிலம்பரசன் எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சுமார் 6 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 08.30 மணிக்கு நாகப்பன், சுப்பிரமணி, சந்துரு, காமாட்சி ஆகிய நால்வரும் எனது தம்பி சிலம்பரசனை அடித்துவிட்டார்கள். நாகப்பன் கட்டையால் எனது தம்பியை அடித்தார். சந்துரு கொடுவாளால் எனது தம்பியை வெட்டினார். சுப்பிரமணி எனது தம்பியை எட்டி உதைத்தார். காமாட்சி எனது தம்பியை துடைப்பத்தாலும் முரத்தாலும் எனது தம்பியை அடித்தார். நான்கு பேரும் சேர்ந்து எனது தம்பியை அடித்தார்கள். அதன் பின்னர் எனது தம்பி மருத்துவமனையில் சேர்ந்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## குறுக்குவிசாரணை

குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 173-2024 (160/2020) |
| Deposition of witness for | Prosecution : LW 1 - PW 1 |
| | Defence : |
| | Court : |
| Name : சிலம்பரசன் | Father's Name: ராஜீ |
| | Husband Name: |
| Village : காட்டுமலையனூர் | Taluk : |
| | Calling : |
| | Age : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2026

**2** முதல் **4** எதிரிகள் ஆஜர்**. 1**ம் எதிரி ஆஜர் இல்லை**.** கு**.**வி**.**மு**.**ச**.**பிரிவு **317** ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபடுகிறது**.**
சாட்சியின் அடையாளம் வேட்டவலம் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. ரத்தினவேல் அவர்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது.

**முதல் விசாரணை :**

**நான் தற்போது சென்னையில் வசித்து எலெக்ட்ரீஷியன் பணி செய்துவருகிறேன். எனது சொந்த ஊர் காட்டு மலையனூர் வல்லக்குளமாகும். எனக்கு ஒரு தம்பி உள்ளார். எனது அப்பா, அம்மா இருவரும் இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நான் எனது பாட்டியார் வீட்டில் வளர்ந்தேன். 29.01.2019 ம் தேதி காலை 08.30 மணிக்கு நான் சென்னையில் இருந்து எனது பாட்டி வீட்டிற்கு வந்தேன். அப்போது எதிர் வீட்டில் இருக்கும் நாகப்பன், சுப்பிரமணி, காமாட்சி, சந்துரு ஆகியோருக்கும் எங்களுக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோத்தினால் நாகப்பனும், சுப்பிரமணியனும் என்னை கட்டையால் இடது தோளிலும், மார்பிலும் அடித்தார்கள். காமாட்சி துடைப்பத்தாலும் எனது முதுகில்**

அடித்தார்கள். சந்துரு கொடுவாள் எடுத்துவந்து முதுகில் குத்த வந்தார் அப்போது கைகலப்பு ஆகி எனது இடுப்பபில் காயமானது நான் மருத்துவமனையில் சேர்ந்தேன். மறுநாள் 30.01.2019 ம் தேதி வேட்டவலம் காவல் நிலையத்தில் இருந்துவந்த போலிசார் விசாரணை செய்தார்கள். எனது புகாரினை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்து தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்.

குறுக்குவிசாரணை

குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 247-2024 (58/2023) |
| Deposition of witness for | Prosecution : LW 1 – PW 1 |
| | Defence : |
| | Court : |
| Name : பரிமளா | Father's Name: |
| | Husband Name: ராஜமாணிக்கம் |
| Village : பாக்கம் கிராமம் | Taluk : |
| | Calling : |
| | Age : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2026

எதிரி ஆஜர்.

சாட்சியின் அடையாளம் வேட்டவலம் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. ரத்தினவேல் அவர்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது.

முதல் விசாரணை :

நான் தற்போது பாக்கம் கிராமத்தில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். எனது கணவர் பெயர் ராஜமாணிக்கம், எனக்கு 3 குழந்தைகள் உள்ளார்கள் அதில் 1 மகள், 2 மகன்கள் உள்ளார்கள். எனது கணவர் ராஜமாணிக்கம் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மதியம் 02.00 மணியளவில் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் வேலைக்கு திருவண்ணாமலைக்கு சென்று பின்னர் மீண்டும் வீட்டிற்கு வரும்போது காட்டுக்குளம் அருகே வரும்போது டாடா ஏசி வாகனம் வந்து மோதி விபத்து ஏற்பட்டு விட்டது. எங்கள் உறவினர் மேற்படி எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது என்று போன் செய்தார்கள் நான் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். மேற்படி எனது கணவருக்கு கால் உடைந்து இருந்தது, மண்டையில் காயம் ஏற்பட்டிருந்தது. எனது

கணவரை மேல் சிகிச்சைக்காக சென்னை, ராஜிவ்காந்தி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். மறுநாள் விடியற்காலை எனது கணவர் இறந்துவிட்டார். பின்னர் எனது கணவரின் உடலை போஸ்ட்மார்ட்டம் செய்து கொடுத்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பு சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியமாக பாவிக்க கேட்டு அனுமதி அளித்ததின் பேரில் அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**

கடந்த 29.07.2021ம் தேதி மாலை 04.40 மணிக்கு எனது கணவர் TN 16 D 4116 என்ற Hero splendor இருசக்கர வாகனத்தை திருவண்ணாமலை – திண்டிவனம் பிரதான சாலையில் திருவண்ணாமலையில் இருந்து செஞ்சி நோக்கி சோ. காட்டுக்குளம் கிராம எல்லையில் உள்ள காமாட்சி அம்மன் கோவில் அருகே வந்தபோது அவருக்கு எதிரி திசையில் இருந்து TN 37 BE 5756 என்ற எண் கொண்ட தோஸ்த்து வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்த எனது கணவரின் மீது மோதியதாகவும் பின்னர் 108 ஆம்புலென்ஸ் மூலமாக GH ல் சேர்த்ததாக தகவல் கேள்விப்பட்டு சென்று எனது கணவரைப் பார்த்ததாகவும் மேற்படி விபத்தை ஏற்படுத்தியவர் சங்கராபுரம் தாலுக்கா, புரசப்பட்டு கிராமத்தை சேர்ந்த லட்சுமணன் மகன் சுரேஷ் என்று கேள்விப்பட்டு தெரிந்துக்கொண்டதாகவும் அதுசம்மந்தமாக கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தாகவும் பின்னர் 30.07.2021ம் தேதி அதிகாலை 02.30 மணிக்கு சென்னை, ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் எனது கணவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் பின்னர் எனது கணவரின் உடலின் மீது

பஞ்சாயத்தார் முன்னிலையிலும், சாட்சிகளின் முன்னிலையிலும் பிரேதவிசாரணை செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது சம்பவத்தேதி சம்பவயிடம், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எண், விபத்து ஏற்படுத்திய நபர் ஆகிவற்றைப் பற்றி எதுவும் சாட்சியம் அளிக்காமலும் பல சங்கதிகளை முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை</u>**

மேற்படி எனது கணவருக்கு விபத்து எப்படி ஏற்பட்டது, எங்கு ஏற்பட்டது, யாருடைய வாகனத்தின் மூலமாக ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு மருத்துவமனையில் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் அப்போது திருவண்ணாமலையில் இருந்து மேல்சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்பிவிட்டார்கள். எனது கணவரின் வாகன விபத்து நஷ்ட ஈட்டினை நாங்கள் பெற்றுவிட்டோம் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்